IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE,
KATPADI, VELLORE DISTRICT.

C.C.NO.66/2025

DEPOSITION OF WITNESS P.W.1

| | | |
|---|---|---|
| NAME | : | SARASWATHY |
| HUSBAND'S NAME | : | VARADHARAJ |
| VILLAGE | : | PERIYAPUDUR |
| OCCUPATION | : | FARMER |
| AGE | : | 55 |

Solemnly affirmed in accordance with the provisions of Section 3 and 4 of the Indian Oaths Act 1969, r/w rule 35 and 36 of Criminal Rules of Practice 2019 of the 08th day of JUNE 2026.

**சாட்சிக்கு நீதிமன்ற ஊழியரால் சத்திய பிரமாணம் செய்யப்பட்டு சாட்சியம் பதிவு செய்யப்படுகிறது.**

எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

**முதல் விசாரணை தொடர்ச்சி:**

நான் தற்போது பெரியபுதூரில் வசித்து வருகிறேன். என்னுடைய கழுத்தில் இருந்து செயினை அறுத்து சென்ற நபர்கள் நீதிமன்றத்தில் ஆஜரில் இல்லை.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:**

தேதி மாதம் எனக்கு ஞாபகமில்லை. என்னிடம் உருக்கிய நகைதான் கொடுக்கப்பட்டது. போலிசார் எழுதி என்னிடம் கையொப்பம் பெற்றார்கள். கையொப்பம் மட்டும் தான் வாங்கினார்கள் வேறு எதுவும் விசாரிக்கவில்லை.

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE,
KATPADI, VELLORE DISTRICT.

C.C.NO.66/2025

DEPOSITION OF WITNESS P.W.2

| | | |
|---|---|---|
| NAME | : | SWAPNA |
| HUSBAND'S NAME | : | MOHAN |
| VILLAGE | : | PERIYAPUDUR |
| OCCUPATION | : | AUTO DRIVER |
| AGE | : | 33 |

Solemnly affirmed in accordance with the provisions of Section 3 and 4 of the Indian Oaths Act 1969, r/w rule 35 and 36 of Criminal Rules of Practice 2019 of the 08th day of JUNE 2026.

**சாட்சிக்கு நீதிமன்ற ஊழியரால் சத்திய பிரமாணம் செய்யப்பட்டு சாட்சியம் பதிவு செய்யப்படுகிறது.**

எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

**முதல் விசாரணை :**

நான் தற்போது பெரியபுதூரில் வசித்து வருகிறேன். ஆட்டோ ஓட்டுநராக வேலை செய்து வருகிறேன். அ.சா.1 யை தெரியும் . அவர் என் அம்மா. நான் பத்தாம் வகுப்பு வரை படித்துள்ளேன். கடந்த 11.08.2023 ம் வருடம் நான் ஆட்டோ ஓட்டிவிட்டு மதியம் 11.30 மணியளவில் வீட்டிற்கு செல்வதற்காக வந்து கொண்டிருந்தேன். எனதுஅம்மா அவர் அணிந்திருந்த 3 சவரன் தங்க செயினை அறுத்து சென்று விட்டதாக போன் மூலமாக தகவல் சொன்னார். நான் உடனடியாக சம்பவ இடமான பெரியபுதுர் மெயின் ரோடு கொல்லை மேடு அருகே என் அம்மாவிடம் விசாரித்தேன். அப்போது என் அம்மா என்னிடம் இரு ஆண் நபர்கள் இருசக்கர வாகனத்தில் வந்து என் அம்மாவிடம் பிள்ளையார் கோவில் செல்வதற்கு வழி கேட்பது போல் கேட்டு என் அம்மா அணிந்திருந்து 3 சவரன் தங்க செயினை அறுத்து சென்று விட்டதாக சொன்னார். பின்னர் நானும் எனது தம்பி அரியும் சென்று பின்னாடியே சென்று அக்கம் பக்கம் விசாரித்த போது காட்பாடி நோக்கி சென்றதாக சொன்னார்கள். எதிரி கிடைக்காததால் காவல் நிலையம் சென்று புகார் கொடுத்தோம். போலிசார் வழக்கு சம்மந்தமாக விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:**

தகவல் அடிப்படையில் தான் வழக்கை பற்றி தெரியும் என்றால் சரிதான். போலிசார் என்னை தனியாக விசாரணை செய்யவில்லை.

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE,
KATPADI, VELLORE DISTRICT.

C.C.NO.66/2025

DEPOSITION OF WITNESS P.W.3

| | | |
|---|---|---|
| NAME | : | HARI |
| FATHER'S NAME | : | VARADHARAJ |
| VILLAGE | : | PERIYAPUDUR |
| OCCUPATION | : | PRIVATE |
| AGE | : | 33 |

Solemnly affirmed in accordance with the provisions of Section 3 and 4 of the Indian Oaths Act 1969, r/w rule 35 and 36 of Criminal Rules of Practice 2019 of the 08th day of JUNE 2026.

**<u>சாட்சிக்கு நீதிமன்ற ஊழியரால் சத்திய பிரமாணம் செய்யப்பட்டு சாட்சியம் பதிவு செய்யப்படுகிறது.</u>**

எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

**முதல் விசாரணை :**

நான் தற்போது பெரியபுதூரில் வசித்து வருகிறேன். டிராக் ஆன் கொரியரில் வேலை செய்து வருகிறேன். அ.சா.1 யை தெரியும் . அவர் என் அம்மா. அ.சா.2 யை தெரியும். என்னுடைய அக்கா. நான் BSC வரை படித்துள்ளேன். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் முதலாவதாக உள்ள கையொப்பம் என்னுடையது தான். அந்த கையொப்பம் அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது. அந்த கையொப்பத்தை என்னுடைய அம்மாவின் கழுத்து தங்க செயினை அறுத்து எடுத்து சென்றுவிட்டது தொடர்பான வழக்கில் செய்து கொடுத்தேன். அந்த கையொப்பத்தை 12.08.2023 அன்று செய்து கொடுத்தேன். பெரியபுதூர் சம்பவஇடத்தில் வைத்து செய்து கொடுத்தேன். சம்பவ இடத்தில் போலிசார் மேப் வரைந்தார்கள். என்னுடன் கிருஷ்ணன் என்பவரும் கையொப்பம் செய்தார். போலிசார் வழக்கு சம்மந்தமாக விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:**

என்னுடன் கையொப்பம் செய்த கிருஷ்ணன் எனென்பவர் என் உறவினர் ஆவார். என் அம்மாவுடன் காவல் நிலையம் செல்லவில்லை. என் சகோதரி தான் சென்றார் மறுநாள் நான் காவல் நிலையம் சென்றேன். அங்கு என்னிடம் விசாரித்து கையொப்பம் வாங்கினார்கள் என்றால் சரிதான். முதல் விசாரணையில் சொன்னது போல் சம்பவ இடத்தில் படம் வரைந்து கையொப்பம் வாங்கவில்லை என்றும், காவல் நிலையத்தில் கையொப்பம் செய்து கொடுத்தேன் என்றும், வழக்கிற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

இந்த உத்தரவு என்னால் தட்டச்சருக்கு நேரடியாகச் சொல்லப்பட்டு, அவரால் உடனுக்குடன் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழைகள் திருத்தம் செய்யப்பட்டு இன்று 08.06.2026 ஆம் தேதி பகரப்பட்டது.

S K P DILIP BABU
Digitally signed by S K P DILIP BABU

நீதித்துறை நடுவர்,
காட்பாடி.